1979 மார்ச் 9]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலை 9-00 மணியிலிருந்து பிற்பகல் 1-30 மணி வரை உட்கார்ந்து கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். எப்போது உதவி தேவையோ, அதை நான் தர தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீக்க வேண்டுமென்று சொல்லும் போது, எனக்கும் வேதனையாகத்தான் இருக்கிறது. இதை நான் ஆரம்பத்திலிருந்தே உணர்கிறேன். அப்படி நீக்கினால், பேசிப் பயனில்லை என்ற எண்ணத்தில் உறுப்பினர்கள் உட்காருவார்கள் என்ற முறையில்தான் நான் அதைச் செய்கிறேன். ஆகவே, கோஷங்கள் போட்டதும், தாங்கள் * * * என்று சொன்னதையும் . . . .

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் சொன்னதாகக் குறிப்பிடுகிறீர்கள். அவை முன்னவர் சொன்னதைத் திருப்பிச் சொன்னதாகச் சொல்லவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் சொன்னதையும் தாங்கள் திருப்பிச் சொன்னதையும், தாங்கள் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்தியதையும் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் வாழ்த்தியதை என்னுடைய கெழுதகை நண்பர் இராகவானந்தம் அவர்கள் நிச்சயமாக விரும்புவார்கள். வாழ்த்தியதை எடுத்துவிட வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாழ்த்தியது இருக்கட்டும். * * * என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அதையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(3) தகவல் கோரல்.

(அ) கம்யூனிஸ்ட் கட்சியினர் சிலர் நக்சலைட் என்ற பெயரால் கைது ஆனது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான சீரியஸ் விஷயம் குறித்து நேற்றைக்கு நாங்கள்—உத்திராபதி, சிவசாமி, அம்பிகாபதி ஆகிய மூன்று பேரும்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களை திடீர் திடீரென்று பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இதைப் பற்றி நாங்கள் ஒத்தி வைப்புத்தீர்மானம் கொடுத்ததற்கு காவல்துறை மானியத்தின்மீது இது பற்றி நீண்ட விவாதம் நடத்தலாம் என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த மானியக் கோரிக்கை என்றைக்கு வருகிறது என்று தலைவர் அவர்களே முடிவு செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் இரண்டு நாள் பொது விவாதம் நடக்க இருக்கிறது. திரு. அம்பிகாபதி அவர்கள் அவர்கள் கட்சியின் நேரத்தை எடுத்துக்கொண்டு இன்னும் விளக்கமாகப் பேசலாம். மறுபடியும் வேண்டுமானால் அறைக்கு வாருங்கள். விளக்கம் தாருங்கள். பரிசிலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம். திரு. இரா. தாமரைக்கனி . . .

(திரு. லத்தீப், திரு. சிவசாமி, திரு. தாழை மு. கருணாநிதி ஆகியவர்கள் எழுந்து நின்றனர்).

திரு. எம். ஏ. லத்தீப்: பாயின்ட் ஆப் ஆர்டர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கும்போது அனுமதிக்காமல் உட்காருங்கள் என்றால் எப்படி உட்கார முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கோபத்தை அதிகாரத்தைக் காட்ட வேண்டாம். இது வீடு அல்ல; பேரவை.

திரு. எம். ஏ. லத்தீப்: இது பேரவை என்பதைத் தாங்களும் நினைவில் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதிகளுக்குக் கட்டுப்பட்டு மரியாதை கொடுக்கத் தெரிந்து கொள்ளுங்கள். உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: அனுமதிக்கவில்லையென்றால் பேசிக் கொண்டே இருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். வற்புறுத்தி அனுமதி வாங்குவது என்பது சரியல்ல. 235 உறுப்பினர்களும் ஒழுங்குப் பிரச்சினை என்று எழுப்பிக் கொண்டே இருந்தால் இந்தப் பேரவையின் நிகழ்ச்சிகளை எப்படி நடத்த முடியும்? நான் நின்று கொண்டிருக்கும்போது நீங்கள் அமருங்கள்.

1979 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். உறுப்பினர்கள் ஒழுங்கு பிரச்சினையை எப்போதும் எழுப்பலாம், அதற்கு உரிமையுண்டு. 235 உறுப்பினர்களும் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பலாம். ஆனால் வேண்டுமென்றே ஒழுங்குப் பிரச்சனை என்று சொல்லிக் கொண்டு வற்புறுத்தி நேரத்தை அதற்காக வீணாக்குவது முறையல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் என்னென்ன நிகழ்ச்சிகளை நடத்தித் தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார்களோ அதற்கேற்றபடி நேரத்தை சரிப்படுத்தித் தரவேண்டியிருக்கிறது. எல்லோர்க்கும் சந்தர்ப்பம் தருகிற வகையில் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி நேரத்தைத் தரவேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட உறுப்பினர் யாருக்கும் அனுமதி கொடுக்கக்கூடாது என்ற நிலைமை ஒன்றும் கிடையாது. ஒன்றரை மணிக்குள் கூட்டத்தை முடிக்கவேண்டும். எல்லா உறுப்பினர்களுக்கும் மனத் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் வாய்ப்புகள் தரவேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவில் ஒழுங்குப் பிரச்சனை என்று கேட்டால் நேரததைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமென்று முடிவு செய்துவிட்டால் அவ்வாறு நேரத்தை வீணாக்குவதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லாமல் அனுமதிக்கத் தயார். அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். திரு. லத்தீப் போன்றவர்கள் வற்புறுத்தி, கட்டாயப் படுத்தி ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது என்பது சரியல்ல. இந்த அவையிலே 239 உறுப்பினர்கள் இருர்கிறார்கள். நாம் மட்டும்தான் ஒழுங்குப் பிரச்சினை கேட்பதற்கு உரியவர்கள், மற்றவர்கள் அதற்கு உரியவர்கள் அல்ல என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் கேள்வி நேரத்திலே கூட துணைக் கேள்விகள் கேட்பது கிடையாது.

[முற்பகல் 10—30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் கேட்காதது உங்கள் பிரியம், கேள்வி கேட்கவேண்டுமென்றால் அதற்காக என் கண் பார்வையை நீங்கள் ஈர்த்திருந்தால் அனுமதி கிடைக்கும், அதைக் காரணம் காட்டி இப்போது பேசுகிறேன் என்று சொல்வது சரியல்ல, நீங்கள் கேள்வி கேட்கவில்லையென்றால் அப்படி கேட்காமல் இருப்பதற்கு நான் குற்றவாளியல்ல. கேட்காமல் இருப்பது உங்கள் விருப்பம். இப்படி ஒவ்வொருவரும் எழுந்து கேட்டுக் கொண்டிருந்தால் மசோதாக்களை எப்படி முடிக்கமுடியும் எல்லோரையும் இப்படியே அனுமதித்துக்கொண்டிருந்தால் இன்றைக்கு நிகழ்ச்சிகளை நடத்தமுடியாது, ஆகவே, அமருங்கள்.

TRUTH ALONE TRIUMPHS